بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 19/02/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

“அவர் பௌதீக மற்றும் ஆன்மீக ஞானத்தால் நிரப்பப்படுவார்” என்ற அம்சத்தின் அடிப்படையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது [ரலி] அவர்களைக் குறித்த முன்னறிவிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

பிப்ரவரி 20 ஆம் நாள் ஜமாஅத்தில் முஸ்லிஹ் மவ்வூது முன்னறிவிப்பின் அடிப்படையில் நினைவு கூரப்படுகிறது. இதுவொரு நீண்ட முன்னறிவிப்பாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அல்லாஹ் கூறியவையாகும். அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பாக பல்வேறு சிறப்பம்சங்கள் கூறப்பட்டுள்ளன. அவர் **பௌதீக மற்றும் ஆன்மீக ஞானத்தால் நிரப்பப்படுவார் என்ற அம்சத்தின் அடிப்படையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் எழுத்துக்கள், சொற்பொழிவுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இன்று நான் சில விஷயங்களை எடுத்துரைப்பேன்.**

❖ **‘ஏகத்துவம்’** என்ற தலைப்பில் 17 வயதில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஆண்டு மாநாட்டில் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்கள். இது முற்றிலும் புதிய விஷயமாகும் என்றும் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பாராட்டினார்கள்.

❖ மார்ச் மாதம் 1907 ஆம் ஆண்டு அன்னாரின் வயது வெறும் 18 ஆக இருந்தது. **‘இறை நேசம்’** என்ற ஒரு மகத்துவமிக்க தலைப்பில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கட்டுரை ஒன்றை எழுதினார்கள். அது பிற்காலத்தில் நூலின் வடிவில் வெளியாகியும் உள்ளது. ஆரம்ப காலத்திலேயே சிறிய வயதிலேயே அல்லாஹ் எவ்வாறு பௌதீக மற்றும் ஆன்மீக ஞானத்தால் அன்னாரை நிரப்பத் தொடங்கினான் என்பது அக்கட்டுரையிலிருந்து வெளிப்பட்டு விடுகின்றது.

அன்னார் கூறினார்கள்: இறைவன் மனிதனை அன்பிற்காகவே படைத்துள்ளான். இறைவனின் அன்பில் மனிதன் மூழ்கி விட வேண்டும், நிரந்தர வாழ்க்கையை அளிக்கக்கூடிய கடலில் மூழ்கி எப்பொழுதும் முத்துக்களை தேட வேண்டும் என்பது மனித படைப்பின் நோக்கமாக இருக்கின்றது. இறை நேசத்தின் விளைவாக மட்டுமே மனிதன் பாவத்திலிருந்து தப்பிக்கிறான். மேலும் அந்தஸ்துகளில் மனிதன் முன்னேறுகின்றான். அன்பு தான் இறைவனை அடையாளங்கண்டு கொள்வதற்கு காரணியாக அமைகின்றது. (இறை) நேசம் இன்றி இறைவனைப் பற்றிய உண்மையும், ஞானமும் மனிதனுக்கு கிடைக்கவே முடியாது.

இறுதியில் அன்னார் இஸ்லாத்தின் உயிருள்ள இறைவனுக்கான ஆதாரத்தையும் முன் வைத்தார்கள். இஸ்லாத்தின் இறைவன் மட்டுமே முன்பு அவன் செய்ததைப் போன்றே இன்றும் வஹீ மற்றும் இல்ஹாமின் மூலம் மனிதனுக்கு வழிகாட்டுகின்றான். இதுவே உயிருள்ள இறைவனுக்கான மிகப் பெரும் தனிச் சிறப்பாகும் என்பதை முன் வைத்தார்கள்.

அன்னார் எழுதுகின்றார்கள்: இறை நேசம் என்ற சொல்லை நான் எந்த அளவுக்கு சிந்திக்கின்றேனோ அதே அளவிற்கு ஒரு சிறப்பான இன்பமும், உத்வேகமும் உள்ளத்தில்

தோன்றுகின்றது. இஸ்லாமிய மார்க்கம் எவ்வளவு அன்பிற்குரியதாக இருக்கின்றது! அந்த மார்க்கமானது நம்மை எப்படிப்பட்ட அருட்கொடையின் பக்கம் வழிகாட்டுகின்றது என்றால் அதன் மூலம் நமது உள்ளமும், மூளையும் ஒளிமயமாகி விடுகின்றது. இஸ்லாமிய போதனை காயம்பட்ட நமது உள்ளங்களுக்கு மருந்தளிக்கக்கூடியதாக இருக்கின்றது. இஸ்லாம் தோன்றவில்லை என்றால் இறைவன் மீது ஆணையாக! உண்மையை தேடுபவர் உயிருடனேயே மரணித்திருப்பார். மேலும் எவர்களது உள்ளங்களில் இறை நேசத்திற்கான ஆர்வம் இருக்குமோ அவர்களது முதுகெழும்புகள் உடைந்திருக்கும். ஓர் இறைவன் மீது நம்பிக்கை கொள்ளக்கூடிய மனிதன், நான் யார் மீது அன்பு கொள்கின்றேனோ அவன் ஒவ்வொரு அணுக்களையும் பார்க்கின்றான்; உள்ளங்களின் கூற்றுகளை அறிகின்றான். அவன் கேட்கின்றான்; பேசுகின்றான். அதுமட்டுமல்ல அந்த இறைவன் தன்மீது அன்பு கொள்ளக்கூடியவர்களுக்கு நற்கூலி வழங்குகின்றான் என்பதை அறியும்போது அந்த மனிதன் தனது உள்ளத்தில் அந்த அன்பின் காரணமாக மகிழ்ச்சியடைகின்றான். சிறப்பான இன்பத்தை உணர்கின்றான்.

❖ ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் டிசம்பர் மாதம் 28 ஆம் தேதி 1908 ஆம் ஆண்டின் மாநாட்டில் 'நாம் எவ்வாறு வெற்றி பெற முடியும்' என்ற தலைப்பில் ஞானமிகு சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்கள். அந்த சொற்பொழிவில் கூறப்பட்ட கருத்துக்கள் 19 வயதைக்கொண்ட இளைஞருடையதாகும்.

அன்னார் கூறினார்கள்: ஒவ்வொரு மனிதனும், இறைவன் ஏன் என்னை படைத்தான் என்பதை சிந்திக்க வேண்டும். அதே நேரம் மரணிப்பது எல்லா மனிதர்களுக்கும் நிச்சய நிகழ்வாக இருக்கின்றது. மரணித்த பிறகு என்ன நடக்கும் என்பதை மனிதன் சிந்திக்க வேண்டும். இந்த சில நாட்கள் வாழ்க்கைக்காக மனிதன் இந்த அளவிற்கு முயற்சி செய்கின்றான்; திட்டங்கள் தீட்டுகின்றான் என்றால், மறு உலகின் வாழ்வான அந்த முடிவு பெறாத வாழ்க்கைக்காக முயற்சிகள் அவசியமில்லையா? அந்த வாழ்க்கைக்காகவும் நாம் ஏதாவது ஏற்பாட்டை செய்ய வேண்டுமல்லவா?

திருக்குர்ஆனின் போதனைகளின் ஒளியில் அன்னார் விவரிக்கின்றார்கள்: மனிதன் ஒரு சிறிய வியாபாரம் செய்யும்போது கூட மிகவும் எச்சரிக்கையாக இருக்கின்றான். எது நன்மையாகவும், பயனளிக்கக் கூடியதாகவும் இருக்கின்றதோ அதனையே மனிதன் எப்பொழுதும் வாங்குகின்றான். அவ்வாறிருக்க இலட்சங்கள் அல்ல; கோடிகளும் அல்ல; இன்னும் கூறப்போனால் எல்லையற்ற இலாபம் தரக்கூடிய வியாபாரத்தை மனிதன் செய்யாமல் இருப்பது எவ்வளவு பரிதாபத்திற்குரிய விஷயமாகும்.

❖ அடுத்து 1916 ஆம் ஆண்டின் மாநாட்டில், கிலாஃபத் அரியணையில் அமர்ந்த 2 ஆம் ஆண்டில் அன்னார் 'இறை தியானம்' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதில் அன்னார் மிகவும் தனிச்சிறப்பான முறையிலும், உள்ளம் கவரும் வகையிலும் இறை தியானத்தையும், அதனுடன் தொடர்புடைய விஷயங்களையும் எடுத்துரைத்தவாறு இறை தியானம் என்றால் என்ன? அதனுடைய தேவைகள் என்ன? அதனுடைய வகைகள் மற்றும் நன்மைகள் பற்றி ஒளியூட்டியுள்ளார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: திக்ர் - தியானம் என்பது நான்கு வகைப்படும். முதல் வகை தொழுகையாகும். இரண்டாவது வகை திருக்குர்ஆன் ஓதுதலாகும். மூன்றாவது, அல்லாஹ்வின் பண்புகளை எடுத்துரைப்பதாகும். நான்காவதாக, இறை பண்புகளை தனிமையில் எடுத்துரைத்து ஆழ்ந்து சிந்திப்பதாகும். இறை தியானத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளும் பொருட்டு இறை தியானம் செய்வதற்கான குறிப்பான நேரங்களையும் எடுத்துரைத்தார்கள். தஹஜ்ஜுது தொழுகையை தொடர்ந்து தொழுமாறு வலியுறுத்தினார்கள். எவ்வாறு நாம் முறையாக தொடர்ந்து தஹஜ்ஜுது தொழலாம் என்பது குறித்தும், தஹஜ்ஜுதை பேணுவது குறித்தும் 12 க்கும் மேற்பட்ட வழிமுறைகளை எடுத்துரைத்தார்கள்.

❖ **இறைவனின் படைத்து பரிபாலித்தல் என்ற பண்பு அண்ட சராசரத்தின் அனைத்து பொருட்களையும் சூழ்ந்துள்ளது.** 1917 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9 ஆம் தேதி

பட்டியாலாவில் இந்த தலைப்பில் அன்னார் சொற்பொழிவாற்றினார்கள். இறை இருப்பு, இஸ்லாம் மற்றும் திருக்குர் ஆனின் உண்மைத்துவம் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உண்மைத்துவத்தை 'படைத்து பரிபாலித்தல்' என்ற பண்பின் மூலம் நிரூபணம் செய்து காட்டினார்கள். அல்லாஹ்வின் பண்புகள் அவனது இருப்பிற்கு சான்றுகளாகும். இறைவனது பண்புகளைக் குறித்து ஆழ்ந்து சிந்திப்பதாலும், எப்பொழுதும் வெளிப்படும் அவனது வல்லமைகளைக் காண்பதாலும், நிச்சயம் ஒரு வல்லமை மிகுந்த அறிஞனும், கருணை மற்றும் கண்ணியமிக்க இருப்பும் இருக்கவே செய்கின்றது என்பதை ஒப்புக் கொள்ள நேரிடும்.

❖ அடுத்து அன்னாரின் ஒரு சொற்பொழிவு இருக்கின்றது. 1919 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 'இஸ்லாத்தில் கருத்து வேறுபாடுகளின் ஆரம்பம்' என்ற தலைப்பில் அன்னார் மாடர்ன் ஹிஸ்டோரிகல் சொஸைட்டி அமைப்பின் ஒரு கூட்டத்தில் இஸ்லாமியா காலேஜ் லாஹூரில் சொற்பொழிவாற்றினார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: **இஸ்லாத்தில் பிரிவினைக்கான அடித்தளம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்த 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்டது. இஸ்லாத்தின் குழப்பங்களுக்கு சில பெரிய பெரிய சஹாபிகளே காரணமாவர் என்ற சிந்தனை முற்றிலும் தவறாகும்.**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது இந்த கட்டுரையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஆரம்ப கால நிலைமைகளையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு இருந்த அந்தஸ்தையும் எடுத்துரைத்தார்கள். குழப்பம் எங்கிருந்து உருவானது? சஹாபிகளைப் பற்றிய தப்பெண்ணம் ஆகுமற்றது போன்ற விஷயங்களை விவாதித்தவாறு குழப்பத்தின் காரணங்களையும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் அது ஏற்படுவதற்குரிய காரணிகளையும் அன்னார் எடுத்துரைத்துள்ளார்கள். குழப்பத்தின் தோற்றுனரான அப்துல்லாஹ் பின் சபாவின் நிலைமைகளையும், அக்காலத்தில் கூஃபா, பஸரா, சிரியா மற்றும் அங்குள்ள முஸ்லிம்களின் பொதுவான மனோபாவத்தைப் பற்றியும் விளக்கியுள்ளார்கள்.

லாஹூர் இஸ்லாமிய கல்லூரியின் பேராசிரியரான அப்துல் காதிர் சாஹிப் M.A அவர்கள் இதன் முதல் வெளியீட்டில் எழுதியுள்ளார்கள்: அறிஞரான தந்தைக்கு அறிஞரான மகன். இந்த சொற்பொழிவு மிகவும் அறிவுப் பூர்வமானதாக இருக்கும் என்பதற்கு ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது அவர்களின் பெயரே போதுமான சாட்சியாக இருக்கிறது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டம் பற்றி எந்த அளவிற்கு அசல் இஸ்லாமிய வரலாற்றை படிப்போமோ அதே அளவிற்கு இந்த கட்டுரை படிப்பினை பெறக்கூடியதாகவும், மதிப்பிற்குரியதாகவும் இருக்க காண்போம்.

❖ அடுத்து அன்னாருடைய 'தக்தீரே இலாஹி - இறை நியதி' என்ற சொற்பொழிவாகும். 1919 ஆம் ஆண்டு ஆண்டு மாநாட்டில் காதியானிலுள்ள மஸ்ஜித் நூரில் அன்னார் சொற்பொழிவாற்றினார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபா அவர்கள் கூறுகின்றார்கள்: என்ன அற்புதமான சொற்பொழிவு! ஞானத்தின் கூற்றுகளின் ஒரு தலைசிறந்த படைப்பாக இருந்தது! இறை நியதியின் முக்கியத்துவத்தையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்களையும் எடுத்துரைத்த பிறகு அன்னார் இந்த தலைப்பில் தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். அதாவது, இறை நியதியின் மீது நம்பிக்கையும், இறை இருப்பின் மீது நம்பிக்கையும் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்த விஷயங்கள் ஆகும். அதன் பிறகு அன்னார் இறை நியதி தொடர்பான சர்ச்சைக்குரிய கருத்துக்களை விவாதித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சில வழிகாட்டுதல்களை ஒப்பீடு செய்துள்ளார்கள். அதன் பிறகு இறை நியதியை புரியாததன் விளைவாக மனிதனுக்கு ஏற்பட்ட பெரும் பெரும் தடுமாற்றங்களை அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள். (நடப்பதெல்லாம் இறைவனே செய்ய

வைக்கிறான்; நமக்கு இதில் எந்த தொடர்பும் இல்லை என்ற) வஹ்தத்துல் வஜூத் கொள்கையின் தவறுகளை எடுத்துரைத்தவாறு திருக்குர்ஆனின் ஆறு வசனங்களை எடுத்து வைத்து மிகவும் நுட்பமான மற்றும் வலுவான சான்றுகளை முன் வைத்து அந்த கொள்கையை மறுத்தார்கள்.

அதன் பிறகு அதன் மற்றொரு அம்சத்தையும் தவறு என நிரூபணம் செய்து விட்டார்கள். மேலும் இறைவனால் ஒன்றுமே செய்ய முடியாது. என்ன நடக்குமோ அது திட்டத்தால் மட்டுமே நடக்கும் என்ற எண்ணத்தையும் வலுவான சான்றுகளால் அன்னார் மறுத்தார்கள். இறைஞானம் மற்றும் இறை நியதியை ஒன்றோடு ஒன்று கலந்து விடுவதன் மூலமாக மனித சிந்தனைகள் பெரும் தவறிழைத்து விட்டன. அதனை மிக அழகிய முறையில் ஒப்பீடு செய்து இந்த விவகாரத்தை மிகவும் அழகிய முறையில் கட்டமைத்துள்ளார்கள். இறை நியதி குறித்து பல்வேறு தரப்பட்ட பழைய மற்றும் புதிய ஆட்சேபனைகளுக்கும் இதில் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. இறை நியதி தொடர்பான குறிப்பில் அன்னார் 7 ஆன்மீக அந்தஸ்துகளையும் குறிப்பிட்டுள்ளார்கள். அவை இறை நியதி என்ற விவகாரத்தின் பொருளை சரியாக புரிந்து அதன் தேட்டங்களை முழுமை செய்வதன் விளைவாக மனிதனுக்கு கிடைக்க முடியும்.

❖ அடுத்து அன்னாருடைய ஒரு சொற்பொழிவு உள்ளது. 'மலாயிகத்துல்லாஹ்' என்பது அதன் தலைப்பாகும். அது 1920 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதி உரையாற்றப்பட்டதாகும். நூர் பள்ளிவாசலில் இரண்டு நாட்கள் இந்த தலைப்பில் உரையாற்றினார்கள். திருக்குர்ஆனின் அடிப்படையில் வானவர்களின் உண்மைத்துவம், அவர்களின் அவசியம் மற்றும் அவர்களின் வகைகள், அவர்களின் கடமைகள், அவர்களது தொண்டுகளைக் குறித்து எடுத்துரைத்துள்ளார்கள். மேலும் வானவர்களின் இருப்பு தொடர்பான ஆதாரத்தையும், அது தொடர்பான சந்தேகம் மற்றும் ஆட்சேபனைகளுக்கு ஒரு விரிவான மற்றும் தெளிவான பதிலை வழங்கியுள்ளார்கள். கட்டுரையின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் வானவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கும், அவர்களிடமிருந்து பயன் பெறுவதற்கும் எட்டு வழிமுறைகளையும் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

❖ அடுத்து 1921 ஆம் ஆண்டு 'இறை இருப்பு' என்ற தலைப்பில் சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், தனது சொற்பொழிவில் இறை இருப்பிற்கான எட்டு சான்றுகளையும், அதில் செய்யப்படும் ஆட்சேபனைகளுக்கும் பதில் வழங்கியுள்ளார்கள். இறை பண்புகளிலிருந்து இறை இருப்பிற்கான சான்றுகளை வழங்கியவாறு, இறை பண்புகளின் வகைகளையும் அன்னார் விளக்கியுள்ளார்கள். அல்லாஹ் பற்றிய ஐரோப்பியவாசிகளின் எண்ணங்கள், ஜெராஸ்டர் மார்க்கத்தினரின் எண்ணங்கள், இந்துக்களின் எண்ணங்கள் மற்றும் ஆரியர்களின் சிந்தனைகளைப் பற்றிய ஒப்பீட்டில் இறைவன் தொடர்பாக இஸ்லாமிய போனைகளை விளக்கத்துடன் எடுத்துரைத்துள்ளார்கள். அதுமட்டுமல்லாமல் ஹுஸூர் அவர்கள் தனது அந்த சொற்பொழிவில் இணை வைத்தலின் பொருளையும், அதன் வகைகளையும் எடுத்துரைத்தவாறு அவற்றை மறுத்துள்ளார்கள். இறைவனைப் பார்த்தல் மற்றும் பார்த்தலின் படித்தரங்கள், அதன் பயன்கள் மற்றும் இறைவனை காண்பதற்குரிய வழிமுறைகள் ஆகியவற்றை எடுத்துரைத்துள்ளார்கள்.

❖ பின்னர் 'இளவரசர் வேல்ஸுக்கு அன்பளிப்பு' என்ற தலைப்பில் 1921 ஆம் ஆண்டு அன்னார் ஓர் புத்தகத்தை எழுதினார்கள். இளவரசர் வேல்ஸ் அவர்களின் இந்திய வருகையின் போது அது சமர்ப்பிக்கப்பட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சுருக்கமான அறிவார்ந்த நூலில் ஆளும் அரசாங்கத்துடன் நன்றியுணர்வை வெளிப்படுத்துவது குறித்து எடுத்துரைத்ததுடன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சுருக்கமான வாழ்க்கை மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் போதனை, வரலாறு மற்றும் அது நிலைநாட்டப்பட்டதன் நோக்கத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிமுறையின்படி செயல்பட்டவாறு பிரித்தானிய அரசாங்கத்தின் சிம்மாசன

**வாரிசுகள் வரை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் எட்ட வைத்தார்கள். அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுத்தார்கள்.**

**இளவரசர் வேல்ஸ் அவர்கள் ஹுஸூர் அவர்களால் வழங்கப்பட்ட இந்த அன்பளிப்பை ஏற்றுக் கொண்டார். மேலும் தனது சீஃப் செகரட்டரி மூலமாக அதற்கு நன்றியும் கூறினார். அந்த புத்தகத்தை படித்துக் கொண்டிருக்கும்போது சில இடங்களில் அன்னாரின் முகம் ரோஜா பூவைப் போன்று மலர்ந்திருந்ததாக பின்னர் கிடைத்த தகவல்களிலிருந்து தெரிய வருகின்றது. அன்னார் புத்தகத்தை படித்துக் கொண்டிருக்கும்போது திடீரென எழுந்து நின்று விடுவார்கள். ஆக இதற்கு சிறிது காலம் பிறகு அன்னார் கிறித்தவ மதத்திலிருந்து வெறுப்படைந்ததாக அறிவித்து விட்டார்கள்.**

❖ **அதேபோன்று 1924 ஆம் ஆண்டு 'அஹ்மதிய்யத் எனும் உண்மை இஸ்லாம்' என்ற தலைப்பில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். 1924 ஆம் ஆண்டு வேம்ப்லே கான்ஃபிரஸ் நடத்தப்பட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் அந்த மாநாட்டிற்காக அஹ்மதிய்யத் எனும் உண்மை இஸ்லாம் என்ற பெயரில் அந்த நூலை எழுதினார்கள். பின்னர் அதன் சுருக்கத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் முன்னிலையில் ஹஸ்ரத் சவுத்ரி முஹம்மத் ஜஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் அந்த மாநாட்டில் வாசித்துக் காட்டினார்கள். இந்த சொற்பொழிவு எத்தனை தனிச்சிறப்புமிக்கதாக இருந்ததென்றால், கிருத்தவர்களின் பெரும் பெரும் தலைவர்களும் தன்னையும் மறந்து பாராட்டினார்கள். தர்பிய்யத், சான்றுகள் மற்றும் அதன் சிறப்புகள் மற்றும் அழகின் அடிப்படையில் சந்தேகத்திற்கிடமின்றி தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது என்று கூறினார்கள்.**

**ஆக எவ்வாறிருப்பினும் சில துளிகளையே நான் எடுத்து வைத்துள்ளேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் 18 வயதிலிருந்து 35 வயது வரையிலான அறிவு மற்றும் இறைஞானத்தின் முத்துக்களாகும். நான் எடுத்து வைத்துள்ள விஷயங்கள் அனைத்தும் 17 ஆண்டு கால காலகட்டத்தில் அன்னார் கூறிய விஷயங்கள் ஆகும். அதில் 100 -ல் ஒரு பங்கை கூட என்னால் எடுத்துக்கூற முடியவில்லை என்றே கூற வேண்டும். எனவே அந்த கருவூலத்தின் பெரும் பகுதி அச்சிடப்பட்டு விட்டது. ஜமாஅத் உறுப்பினர்கள் அவற்றை படிக்க வேண்டும். அல்லாஹ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் அந்தஸ்துகளை உயர்த்திக் கொண்டே இருப்பானாக.**

**பாகிஸ்தானின் நிலைமைகளுக்காகவும் துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் அங்குள்ள மக்களுக்கும் அமைதியுடனும், நிம்மதியுடனும் வாழ்க்கையை கழிப்பதற்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் எதிரிகளின் தாக்குதல்களையும், சதித்திட்டங்களையும் தனது அருட்களால் அழித்து விடுவானாக.**

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ الله رحمكم الله اِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)